
# திராவிட சினிமா 6

கருத்து மக்களிடம் பற்றிக் கொண்டால் தீயாகப் பரவும் என்பதுபோல, திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.

படங்கள் உதவி : ஞானம்





■ வீ.மா.ச.சுபகுணராஜன்

## ஆங்கில விளம்பரம் கண்ட வசனங்கள்!

*1950-ஆம் ஆண்டு ஜூன் 24-ஆம் தேதி வெளியானது **‘மந்திரிகுமாரி’**. கலைஞரின் மூன்றாவது படமானாலும், அதிகாரப்பூர்வமாக கதை, திரைக்கதை, வசன எழுத்தாளராக அவரை அங்கீகரித்தது இந்தப் படமே. ஹாலிவுட்டில் பயிற்சி பெற்று, சில காலம் தமிழ்ப் படங்களை இயக்கிய **எல்லீஸ் ஆர்.டங்கன்** இயக்கத்தில், மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் **டி.ஆர்.சுந்தரம்** மேற்பார்வையில் உருவானது.*

*படத்தின் காட்சியமைப்பு, குறிப்பாக வீரர்கள் பயிற்சிக் காட்சி போன்றவை காட்சித் தரம்மிக்கவை. படத்தின் ஆங்கில வெளியிட்டு அறிவிப்பு “MANTHIRI KUMARI IS POWERFUL DIALOGUES PICTURE” என்ற அறிவிப்பே முதன்மையாகக் காணப்படுகிறது. தமிழ்த் திரைப்படங்களில் வசனங்களின் தரத்தை மிக உயர்வான இடத்துக்கு இட்டுச் சென்ற கலைஞர் அவர்களின் கைவண்ணமே இந்தப் படம். திரைப்படத்தின் முதல் காட்சி தொடங்கி, இறுதிவரை வசனங்களே வழிநடத்துகின்றன.*

*இத்திரைப்படத்தின் கதைக்களம், **‘திராவிடச் சினிமாக்களின் முத்திரை மாதிரி’** எனலாம். ஆட்சித் திறனற்ற அரசன், அவனை ஆட்டிப்படைக்கும் ‘வேதவிற்பன்னரான’ ராஜகுரு. ‘பேசும்’ (ஏமாற்று) தேவியின் குரலுக்குப் பணிந்து தீர்ப்பை மாற்றும் மந்திரி. மக்களால் ‘தேர்ந்தெடுக்கப்பட்ட படைத் தலைவன்’ வீரமோகனைப் பழிவாங்க ‘கொள்ளையை கலை’யாகக் கொண்டாடும் ராஜகுரு மகன் பார்த்தீபன்.*

*தளபதியைக் காதலிக்கும் இளவரசி ஜீவரேகா. ராஜகுரு மகனின் காதலி அமுதவள்ளி ‘மந்திரி குமாரி’. இவர்களின் வழியாக உருவாகும் காதலும் மோதலும் துரோகங்களும் குழப்பங்களும், இறுதியில் உருவாகும் தீர்வும்தான் கதை.*

### கலைஞரின் சம்பளம்!

*இந்தப் படத்தைப் பற்றி, கலைஞர் எழுதுகையில், “என்னுடைய நண்பர் கவி கா.மு.ஷெரீப், சேலத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் திரைப்பட நிறுவனத்தில் பாட்டு எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவர் ஒருநாள் என்னைப் பார்க்க திருவாரூர் வந்திருந்தார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் டி.ஆர்.சுந்தரம் அவர்கள் என்னுடைய எழுத்துக்களை விரும்புவதாகவும், என்னைக் கொண்டு படங்களுக்கு வசனம் எழுதவேண்டுமெனக் கூறியதாகவும் குறிப்பிட்டு என்னுடைய சம்மதத்தைக் கேட்டார்.*

*அதையடுத்து மாதம் ஐநூறு ரூபாய் சம்பளத்தில் 1949-ஆம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸில் எழுத்தாளனாக அமர்ந்தேன். என்னுடைய **‘மந்திரி குமாரி’** நாடகத்தைப் படமாக எடுக்க வேண்டுமென்ற விருப்பத்தை மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம் வெளியிட்டார். நானும் ஒப்புதல் அளித்து திரைக்கதை, உரையாடல் என அனைத்தையும் படத்திற்கேற்ற வாறு எழுதி முடித்தேன்”.*

***(வண்ணத்திரை 12.01.1989; 19.01.1989)***




சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி எனும் கொள்கைகளின் நோக்கம் பார்ப்பன ஆட்சி மற்றும் ஆன்மிகத் தலைமையை அகற்றுவதே என்று முழங்கியது மந்திரிகுமாரியின் வசனங்கள்.

### வசனங்களின் ஆட்சி

*திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியும் வசனங்களால் கட்டி யெழுப்பப்பட்டிருக்கிறது. முதல் காட்சியிலேயே கொள்ளையர்களின் தலைவனான பார்த்தீபன் தன் நோக்கத்தைப் பிரகடனம் செய்கிறான். ‘இந்த நாட்டு மக்கள் என்னை விட்டு வீரமோகனை படைத்தளபதியாகத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள். அவர்களைப் பழி வாங்குவதற்காகவே இந்தக் கொள்ளை’ என்கிறான்.*

*ஒரு மன்னராட்சியில் படைத்தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதே கலைஞரின் முதல் செய்தி. திராவிட சினிமாக்கள், மன்னர்கள் கதைகளைக் கையாண்ட போதும் மக்களாட்சியின் பண்புகளை அதன் பகுதியாகப் புனைந்தன.*

*இங்கு வேதவேள்வி செய்யும் ராஜகுருவின் மகன் படைத் தலைவர் ஆவதற்கு நினைக்கிறான். ராஜகுரு ஒருநிலையில் மன்னனாக முடிசூட்டிக் கொள்ளச் சதி செய்கிறான். அதாவது ஒரே நேரத்தில் ஆன்மிகத் தலைமையையும், ஆட்சித் தலைமையையும் கைபற்ற மனப்பால் குடிக்கிறது பார்ப்பன நரித்தனம். அந்தச் சதிவலையிலிருந்து ஆட்சியையும் மக்களையும் காக்கிறார் ‘மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தளபதி’. அண்ணா ‘தளபதி’ என்றே அழைக்கப்பட்டார் என்பது இங்கே நினைவூட்டிக் கொண்டால், கலைஞரின் திரைக்கதை வசனங்களின் நுணுக்கம் விளங்கும்.*

### சமநீதி எங்கே ?

*படத்தின் தொடக்க அரசவைக் காட்சியிலேயே இந்த மோதல் வெடிக்கிறது. கொள்ளையில் உயிர் மற்றும் உடைமைகளை இழந்தவர்கள் கொந்தளித்து **‘அலட்சியமான ஆட்சி முறை’** என்கிறார்கள். ராஜகுரு மன்னனையும், மந்திரியையும் முந்திக்கொண்டு, ‘இது அரசவை. நாவை அடக்கு’ என்கிறான். மக்களிலொருவன், ‘இதைச் சொல்ல நீ யார்?’ எனப் பதில் கேள்வி கேட்கிறான்.*

*‘நான் அறிவுப் பொக்கிஷம், மன்னனே பணியும் ராஜகுரு’ என்கிறான் ராஜகுரு. தொடரும் வாதத்தில் ராஜகுருவின் வேள்வியால் கள்வர்களை ஒழிக்கும் திட்டத்தை பைத்தியக்காரத்தனம் என்கிறான், வீரமோகன்.*

*காட்சியமைப்பிலேயே படைத் தளபதி அரசவையின் ஆசனத்தில் அமராமல் மக்களோடு நின்று அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறான். அதே போல தளபதியால் பிடிக்கப்படும் கொள்ளைக்காரனான பார்த்தீபனின் விசாரணையை, **‘வேதவிற்பன்னர் மகனுக்கு விசாரணையா?’** எனக் கோபாவேசம் கொள்கிறான்.*

### கதைக்களத்தின் திருப்பம்

*பார்த்தீபன் மீது காதலுறும் மந்திரிகுமாரி, சிலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு மோசடியான ‘தேவியின் பேச்சு’ என கபட உரை நிகழ்த்துவதால் பார்த்தீபன் நிரபராதியாகி, வீரமோகன் நாடு கடத்தப்படுகிறான். பார்த்தீபனின் சுயரூபம் அறியும் மந்திரிகுமாரி, தன் உற்றத் தோழி இளவரசிக்கும் அவளது காதலனுக்கும் செய்த துரோகத்துக்குப் பதிலாக பார்த்தீபனைக் கொன்று, அவனது உண்மை முகத்தை அம்பலப்படுத்தித் தானும் உயிர் துறக்கிறாள்.*

*‘பெண்களினால் உயர்வாகிச் செழித்திடுமே புவி வாழ்வு’, என்ற பாடலோடு தொடங்கும் படம், இறுதியில் தியாகத் திருவுரு மந்திரிகுமாரிக்குச் சிலை வைத்து ‘பெண்களின் வீரம் அறிந்திட ஓவிய மானாய்’ என்ற புகழாஞ்சலியோடு நிறைவடைகிறது.*

*காதல் காட்சிகளின் வசனங்களிலும் போலி ஆன்மிக விமர்சனம் தொடர்கிறது. இளவரசி ‘என்ன வாழ்க்கையைத் துறந்தவர் போலப் பேசுகிறீர்கள்’ எனக் கேட்க ‘அப்படியானால் காவியுடுத்தி ஆஸ்ரமம் அமைத்து மன்னனின் அனுமதியோடு உன்னை என் சிஷ்யை ஆக்கி விடமாட்டேனா’ எனக் கேலி பேசுகிறான் வீரமோகன். **நகைச்சுவைக் காட்சிகளிலும் பகுத்தறிவு.** எம்.ஜி.ஆர், நம்பியார், எஸ்.ஏ.நடராஜன், மாதுரி தேவி ஆகியோர் நடித்துள்ளனர்.*

...படம் விரியும்

## :ப்ளாஷ்பேக்



நானும் மாலை அணிவித்து வரவேற்றேன், பிறகு அவர் தலைமையில் இளைஞர் அணியில் பணியாற்றி வருகிறேன் என்பது என்றென்றும் மறக்க முடியாத நிகழ்வு.

**-சி.எம்.சக்திவேல்,**
**மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்,**
**திண்டுக்கல்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in




சக்திவேல்

### சிறுவனின் வரவேற்பு!

1986-ஆம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம், பாளையம் ஒன்றியத்தில், அன்றைய இளைஞர் அணி செயலாளராக இருந்த நம் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள், அறிமுகக் கூட்டம் மற்றும் கொடியேற்று விழாவுக்காக வருகை தந்திருந்தார்கள். அப்போது, அவரை என் தந்தை சி.மணி அவர்களுடன், 9 வயது சிறுவனாக

## கேரளமும் காங்கிரஸூம் பின்னே கம்யூனிஸ்ட்டும்...




கேரளத்தில் காங்கிரஸூம் கம்யூனிஸ்டும் எதிரெதிர் துருவங்கள். ஆனால், மக்கள் நலம் சார்ந்த விஷயங்களில் இரண்டு கட்சிகளும் ஓரணியில் நிற்கும். அதற்கு உதாரணமாக, கேரளத்தின் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் ஷைலஜா டீச்சரின் வாழ்க்கையில் நடந்த சுவாரஸ்ய நிகழ்வு ஒன்று இப்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது. அந்த நிகழ்வைப் பற்றி, சமீபத்தில் வெளியான ‘மை லைஃப் ஏஸ் எ காம்ரேட்’ என்ற தனது சுயசரிதையில் எழுதி உள்ளார் டீச்சர்.

“2004-ஆம் ஆண்டில் கட்சி என்னை முழுநேர கட்சிப் பணிக்கு அழைத்தது. அதற்கு நான் ஆசிரியப் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற வேண்டும். 55 வயதில் ஓய்வு பெறலாம் என்றால், எனக்கு அப்போது 9 ஆண்டு பணி மீதமிருந்தது. விருப்ப ஓய்வு பெற வேண்டுமானால் நான் குறைந்தபட்சம் 20 ஆண்டு ஆசிரியப் பணி செய்திருக்க வேண்டும். எனக்கு 23 ஆண்டு பணி அனுபவம் இருந்தது. ஆனால் 5 ஆண்டுகள் நான் எம்.எல்.ஏ.வாக இருந்த காரணத்தால், அந்த ஆண்டுகளை நான் ஆசிரியப் பணி செய்த ஆண்டுகளாகக் கணக்கில் கொள்ள முடியாது. அப்படியெனில், என் அனுபவம் 18 ஆண்டுகள் மட்டும்தான். ஆகவே, என்னால் விருப்ப ஓய்வு பெற முடியாது.

இந்நிலையில், நான் விருப்ப ஓய்வு பெற ஒரே வழி, என் எம்.எல்.ஏ. காலத்தையும் ஆசிரியப் பணி காலமாகக் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். அதற்கு மாநில அரசிடமிருந்து சிறப்பு அனுமதி பெறுவது அவசியம். எனவே, முதல்வர் ஏ.கே.அந்தோணியை அணுகினேன். அப்போது அவர், “பொதுவாக பள்ளிக்கூடம் முடிந்தவுடன் மாலை 4 மணியிலிருந்து என் கட்சியைத் தாக்குவீர்கள். இப்போது, அதே வேலையை காலை 10 மணியிலிருந்து செய்யப் போகிறீர்களா?” என்று நகைச்சுவை தொனிக்கக் கேட்டார். எனினும் அவர் அன்பானவர். என் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, ‘சமூகப் பணிதான் உங்களுக்குச் சிறந்தது’ என்று கூறி, எனக்குச் சிறப்பு அனுமதி வழங்கினார்”.

## கருவூலம் மொழிப்போர்!

**1965-ல் இந்தித் திணிப்புக்கு எதிராக, அந்த ஆண்டு குடியரசு நாளை துக்க நாளாகக் கொள்வது என்றும், கண்டனக் கூட்டங்கள், கருப்புக் கொடி ஏற்றுவது என்கிற போராட்டங்களையும் அறிவித்தது கழகம். போராட்டம் நடக்க இருந்த நிலையில், ஜனவரி 25-ஆம் தேதி இரவிலேயே முக்கியத் தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். திட்டமிட்டபடி போராட்டம் செய்த கழகத்தினர் மீது காவல்துறை தடியடி நடத்தியது. தீக்குளிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன. துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் உயிரிழந்தனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 122




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.